**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.438/2022**

**<u>தேதி : 03.06.2025</u>**

**<u>(வா.சா.1) – திரு.கணேசன்</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (பிரதிவாதிகள் தரப்பில்)</u>**

**1. எனக்கு சொந்த ஊர் மடத்துக்குளம் தாலுகா, கண்ணாடிப்புத்தூர். என் மனைவி பெயர் காளியம்மாள். நான் கிரையம் பெற்ற ஒரு சொத்தில் காளியம்மாள், நாச்சிமுத்து, ராஜேஸ்வரிக்கு தலா 3ல் 1 பாகம் உள்ளது. எனக்கு பழனிச்சாமி, கலைச்செல்வி, பாலசுப்பிரமணி ஆகியோர் எனது மக்கள். நான், என் மனைவி, என் மக்கள் ஆகியோர் ஒரே குடும்பமாக உள்ளோம் என்றால் சரிதான். என்னுடைய மனைவிக்கும் சொத்தில் பாத்தியம் இருக்கும் நிலையில் அதனை எதற்காக கிரையம் பெற்றேன் என்றால் என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் நான் சொத்தை கிரையம் வாங்கினேன்.**

**2. சொத்துக்கள் எல்லாம் 24.08.1956ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் அடிப்படையில் என் மாமனார் நாச்சிமுத்துக்கவுண்டர் மகன் பழனிச்சாமிக்கு கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். அதன்பின்பு 26.09.1994ம் தேதியன்று 1956ம் வருட பாகப்பிரிவினை பத்திரத்தில் 'ஏ' பாகச்சொத்தை என் மாமனார் பழனிச்சாமி, சின்னப்பழனிச்சாமி என்னுடைய மைத்துனர் நாச்சிமுத்து ஆகியோர் பாகம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகவிஸ்தியில் எனது மாமனார் குடும்பத்திற்கு கிடைத்த சொத்தைத்தான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.**

**3. மேற்படி 1994ம் ஆண்டு பாகப்பிரிவினையில் தொப்பம்பட்டி கிராமம், சர்வே எண்.112/3 ல் முழுப்புலமும், சர்வே எண்கள் 112/3 மற்றும் 112/2 ஆகிய இரண்டிலும் சேர்ந்தார்போல் உள்ள கிணற்றில் பகுதி கிணறும் என் மாமனார் குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் மாமனாருக்கும், என் மைத்துனருக்கும் 1994 பாகவிஸ்தியில் கிடைத்த சொத்துக்களை என் மனைவி காளியம்மாள், என் மனைவியுடன் பிறந்த ராஜேஸ்வரி, நாச்சிமுத்து ஆகிய மூவரும்**

சேர்ந்து எழுத்துப்பூர்வமாக எவ்வித பாகவிஸ்தி ஆவணமும் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

4. என்னுடைய மைத்துனர் நாச்சிமுத்துவும், ராஜேஸ்வரியும் சேர்ந்து குப்புலட்சுமி என்பவருக்கு அவர்களுக்குப் பாத்தியப்பட்ட 3 ல் 2 பாகத்தை 11.07.2017 ம் தேதியன்று கிரையம் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். மீதமுள்ள என் மனைவியின் பாகத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். குப்புலட்சுமி வாங்கி அனுபவித்த சொத்துக்களை இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் கோமதி, செல்வி ஆகியோருக்கு 05.07.2021 ம் தேதியில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த இரண்டு கிரைய ஆவணங்களையும் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த கிரையப்பத்திரங்களில் 1994 ல் ஏற்பட்ட பாகவிஸ்தியில் கிடைத்த சொத்துக்களில் பொதுவில் 3 ல் 2 பாகம் என்று குறிப்பிட்டு கிரையம் கொடுத்துள்ளதாகச் சொன்னால் எனக்கு தெரியாது.

5. நான் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் எந்த சர்வே எண்ணில், எவ்வளவு நிலம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்தச் சொத்துக்களில் எந்த சர்வே எண்ணில் உள்ள கிணற்றில் பாத்தியம் வாங்கியுள்ளேன் என தெரியுமா என்றால் ஞாபகமில்லை. கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கிணறு எந்தெந்த சர்வே எண்ணில், எத்தனை விஸ்தீரணத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. கிரையம் பெறுவதற்கு முன்பு நான் அந்த சொத்தை பார்த்துள்ளேன். நான் கிரையப்பத்திரம் பதிவதற்கு முன்பு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று பட்டா, சிட்டா ஆவணங்களை சரிபார்த்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர்தான் எழுதிக்கொடுத்தார். அவர் என்ன எழுதிக்கொடுத்தார் என்று ஞாபகமில்லை. கிராம நிர்வாக அலுவலர் எழுதிக்கொடுத்த ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் வீட்டில் வைத்திருக்கிறேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

6. சொத்தை கிரையம் எழுதுவதற்கு முன்பாக சொத்தை அளக்கவில்லை. நான் சொத்தை கிரையம் வாங்கிய விபரத்தை கூட்டுப் பாகஸ்தர்களுக்கு தகவல் தெரிவிக்கவில்லையா என்றால் தெரிவிக்கவில்லை. இந்நீதிமன்ற அ.வ.எண்.418/2017 வழக்கு காளியப்பகவுண்டர் வகையறாவால் என் மனைவி காளியம்மாள், நாச்சிமுத்து, ராஜேஸ்வரி ஆகியோர் மீது கிணற்றைப்

பொறுத்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த கிணற்றுக்கு மின் இணைப்பு எண் உள்ளது. அதன் எண் எஸ்.சி.18 என்றால் சரிதான். அது கிணற்றை ஒட்டி மேல்புறம் உள்ளது. அந்த கிணற்று மோட்டாரில் 6 ல் 1 பாகம் எனக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். அந்த கிணறு கிழமேல் நீளியாக உள்ளது. கிணற்றில் ஆழம் 60, 70 அடி இருக்கும் என்றால் அதன் ஆழம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது.

7. மேற்படி கிணறு 1956ம் வருட பாகவிஸ்திக்கு முன்பாக வெட்டப்பட்ட கிணறு என்றால் எனக்கு தெரியாது. அந்த கிணறு ஆரம்பத்தில் எருமை மாடுகள் வைத்து கவலை பூட்டி தண்ணீர் இறைக்கப்பட்டு வந்தது என்றும், பின்னர்தான் மின் இணைப்பு பெறப்பட்டது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த இவ்வழக்கில் கிணற்றுக்குப் பாத்தியப்பட்ட சுப்பிரமணி, பெரியசாமி, செல்வராஜ் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றபின்பு வருவாய்த்துறை ஆவணங்களை என் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுத்தேன், ஆனால் பிரதிவாதிகள் அறிவிப்பு அனுப்பிவிட்டார்கள்.

8. பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என் மனைவி காளியம்மாள் தாக்கல் செய்த அ.வ.எண்.121/2013 வழக்கில் எனது மனைவிக்கு 3 ல் 1 பாகம் வழங்கி தீர்ப்பாகிவிட்டது. மீதம் 3 ல் 2 பாகம் யாருக்கு என்றால் என் மனைவியுடன் பிறந்த நாச்சிமுத்து மற்றும் ராஜேஸ்வரி ஆகியோருக்கு பாத்தியம். ராஜேஸ்வரி மற்றும் நாச்சிமுத்து ஆகியோர் குப்புலட்சுமிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றும், குப்புலட்சுமியிடமிருந்து 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும் சொன்னால் சரிதான். அ.வ.எண்.121/2013 வழக்கில் பொதுவில் 3 ல் 1 பாகம் காளியம்மாளுக்கு என தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அந்த பொதுவில் 3 ல் 1 பாகத்தை என் மனைவி நீதிமன்றம் மூலம் மனு செய்து பிரித்து தனிச்சுவாதீனம் பெறவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.06.03 17:17:54 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.